**OS.NO. 43/2008 PW-1**

நாள் : 13.08.2024

பெயர் : முரளி

த/பெ : தனுஷ்கோடி

**2 முதல் 4ம் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

எதற்காக வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் வீடு எனக்கு சொந்தமானது அதற்காக தாக்கல் செய்தேன். நீங்களும் பிரதிவாதிகளும் உறவினர் என்றால் பிரதிவாதி பத்மநாபன் எனக்கு ஒன்று விட்ட பங்காளி. உங்களுக்கும் அவருக்கும் வீடு சம்பந்தப்பட்ட பிரச்சனை இருந்தது என்றால் ஆமாம். வீடு வாடகைவிட்டதற்கான வாடகை ரசீது வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் ஆமாம். வழக்கு சொத்து பத்மநாபன் பெயரில் தான் பட்டாவாகியுள்ளது. 13 வருடங்களாக அவர் பெயரில் தான் இருந்து வருகிறது.

2003 காலகட்டத்தில் நான் கோட்டாட்சியரிடம் இது குறித்து புகார் கொடுத்துள்ளேன். தாவா சொத்து குறித்து உங்களுக்கு ஆதரவாகவும் பிரதிவாதி பத்மநாபன் பெயரில் ஆவணங்கள் உள்ளது என்றால் இல்லை என் பெயரில் ஆவணம் உள்ளது. கோட்டாட்சியர் விசாரணையில் ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் ஆமாம் நீங்கள் சொல்வது தவறு அது போல் எந்த ஆவணத்தையும் நீங்களும் பத்மநாபனும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. இருதரப்பிலும் ஆவணங்கள் இருந்ததானால் நீதிமன்றம் சென்று உரிய பரிகாரம் பெற்றுக்கொண்டு கோட்டாட்சியர் விசாரணையில் அறிவுறத்தபட்டது என்றால் ஆமாம். அரசு தரப்பில் இவ்வழக்கில் தேவையில்லாமல் சேர்த்தீர்கள் என்று சொன்னால் சரியல்ல. எனவே வழக்கு தள்ளுபடி செய்யபட வேண்டும் என்றால் சரியல்ல.

Typewritten to my dictation in open Court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by witness to be corrected.

Sd/- ***********
District Munsif cum Judicial Magistrate,
Ranipet.